1987 ஏப்ரல் 8] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் தாலுக்கா காட்டுமன்னார்குடி தாலுக்காவினுடைய கடைசிப் பகுதியிலே ஏறக்குறைய 20,000 ஹெக்டேர் நிலங்களில் குள்ளந்தார் என்ற நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர் இல்லை என்று கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கர்நாடகத்திலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் பெற்று இருக்கிறோம், விரைவிலே தருகிறோம் என்று சொல்லி விவசாயத்திற்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பயிரானது மே மாதம் தான் அறுவடை ஆகும். 2, 3 தடவை தண்ணீர் தேவைப்படும். எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) அதை திரு. இராமமூர்த்தி, பிரசிடெண்ட், காங்கிரஸ்-ஐ கொள்ளிடம் யூனியன் என்ற மரியாதைக்குரிய உறுப்பினர் எனக்கு அனுப்பியிருக்கிறார்.

"Lower Anicut in Coleroon river was shut down for irrigation due to level and inflow of water reaching the least minimum. In both Sirkazhi and Chidambaram taluks about 20,000 acres of paddy crops in flowering stage that shall give a yield of 40,000 tones of paddy worth about eight crores of rupees are very badly in need of minimum three more water wettings. . . . ." ஆகவே நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது குறைந்தது இரண்டு தடவையாவது தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் ஏற்கனவே குள்ளந்தார் பயிருக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். இன்னும் சேரவில்லை என்று சொன்னால் மறுபடியும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) மொழிபற்றிய அரசின் தீர்மானத்தின்மீது மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நீங்கள் தெரிவித்ததைப் போல பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. எலிசிட்டிங் இன்ஃபர்மேஷன் என்ற அடிப்படையில் கல்வி மானிய

கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற இருக்கின்ற இந்த நேரத்தில் நான் ஒரு தகவலை அவை முன்னவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 3—11—1986 ஆம் நாளன்று மொழி பற்றிய அரசினர் தீர்மானம் அவையில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டதையும், அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டதையும் அல்லது வைப்பதாகச் சொல்லப்படுவதையும் இந்த அவை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது.

9—12—1986 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடிதம் எழுதினேன். அதற்கு பிரதமர் பதில் அளித்தார். அது வேறு விஷயம். 7—1—1987-ல் நான் பெற்ற பதில். முக்கியமான உரிமைப்பிரச்சினை என்ற காரணத்தினால் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 6 மாதம் தாண்டி விட்டது. அங்கிருந்து ஏதாவது பதில் வந்ததா? உயிர்த் துடிப்பு மிக்க உரிமைப் பிரச்சினையாக இருக்கின்ற அந்தத் தீர்மானத்திற்கு வடிவம் தருவதற்கு மைய அரசு தயாராக இருக்கிறது என்ற தகவல் நமது அமைச்சரவைக் குக் கிடைத்திருக்கிறதா? கிடைத்தால் இந்த அவையில் அவர் வைப்பாரா? கிடைக்காவிட்டால் அதைப் பெறுவதற்கு நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினை பற்றி இருக்கிற நிலைமை களை அறிந்து இரண்டொரு நாட்களில் விளக்குகிறேன்.

(உ) நெல்லை மாவட்டத்திலே அமையவிருக்கும் இந்தியக் கடற் படை நுண் தொடர்பு நிலையத்திற்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுத்தல்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் என்ற முறையிலே —இன்றையதினம் மத்திய அரசு தமிழகத்திலே இந்தியக் கடற் படைக்குச் சொந்தமான நுண் தொடர்பு தகவல் நிலையம், வ்கைலாப் போன்று, நெல்லை மாவட்டத்திலே அமைத்திருக் கின்றது. அப்படி அமைக்கப்பட்ட அந்த நிலையத்திற்கு, இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கான அந்தத் திட்டத்திற்காக அதிகாரிகளையும், ஊழியர்களையும் தேர்ந்தெடுக்கின்ற அந்தப்